விழுப்புரம் வடக்கு மாவட்டம் -

உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு செஞ்சியில் பாராட்டு விழா!

மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் - செஞ்சி இராமச்சந்திரன் வாழ்த்துரை!

செஞ்சி, அக்.26-

விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு செஞ்சியில் பாராட்டு விழா நடைபெறுகிறது விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், முன்னாள் ஒன்றிய அமைச்சர் செஞ்சிஇராமச்சந்திரன் ஆகியோர்க ளந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இது குறித்து விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில் கூறுகையில்:

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மேல்மலையனூர், வல்லம், மயிலம், ஒலக்கூர், மரக்காணம் ஆகிய ஒன்றியங்கள் 2021 2026 ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சி பதவிக்காலம் முடிந்த உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு 27. 10. 2026 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் பாராட்டு விழா சிறப்பாக நடைபெற உள்ளது.

பாராட்டு விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், முன்னாள் ஒன்றிய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன், ஆகியோர் கலந்து கொண்டு உள்ளாட்சி பிரதிநிதிகளை பாராட்டி வாழ்த்து தெரிவிக்கின்றனர்.

கனமழை எதிரொலி :

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாத் தலங்கள் அனைத்தும் மூடல்!

'நீலகிரிக்கு வரவேண்டாம்!' – சுற்றுலாப் பயணிகளுக்கு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தல்!

ஊட்டி, அக். 26-

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்து வந்த சூழலில் நேற்று இரவு அதிகன மழையாக மாறி உள்ளது..மாவட்டத்தில் மிக அதிக அளவாக கோத்தகிரி குன்னூர் பகுதியில் நேற்று இரவு கனமழை பெய்தது இதன் காரணமாக குன்னூர் உட்பட்ட பர்லியர்ரில் நேற்று இரவு 21 சென்டிமீட்டர் அளவுக்கு மழை பெய்த காரணத்தினால் உதகை குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் முழுவதுமாக பாதிக்கப்பட்டு ஆங்காங்கே மண் சரிவுகளும் மரங்கள் விழுந்தும் காணப்படுகின்றது இதன் காரணமாக உதகை குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளது.

மேலும் கோத்தகிரியில் பெய்த மழையின் காரணமாக உதகை கோத்தகிரி சாலையும் இன்று 11 மணி முதல் மூடப்பட்டது தொடர்ந்து நீலகிரிக்கு மழைக்கான சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் சமவெளி பகுதியில் இருந்து உதகை மற்றும் குன்னூர் வரவேண்டிய அத்தியாவசியப் பொருட்களினுடைய சேவை முழுவதுமாக நிறுத்தப்பட்டுள்ளது இதனால் உதகையை குன்னூரில் இருந்து சமவெளி பகுதிக்கு செல்ல வேண்டிய மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகி உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று இரவு பரலியார் பகுதியில் ஏற்பட்ட அரசுப் பேருந்து மீது மரம் விழுந்ததில் பேருந்து இயக்கி சென்ற கேத்தி பாலடாவைச் சேர்ந்த அரசு ஓட்டுநர் ஜனகராஜ் என்பவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார் நேற்று காலை முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிற மீட்பு பணிகளை. குன்னூர் சட்ட மன்ற உறுப்பினரும் மாவட்ட கழக பொறுப்பாளருமான கே எம் ராஜு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா ஆகியோர் நேரில் சென்று மீட்பு பணிகளை துரிதப்படுத்தினார்கள்.

இதற்கிடையே மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இயற்கை பேரிடர் காரணமாக நீலகிரிக்கு சமவெளி பகுதியில் இருந்து வர வேண்டிய அத்தியாவசிய பொருட்கள் தங்கு தடை இன்றி கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுவதுடன் நீலகிரிக்கு சுற்றுலாப் பயணிகள் மூன்று நாட்களுக்கு வர வேண்டாம் என்றும் இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு மாலை 6 மணி முதல் காலை 7 மணி வரை போக்குவரத்துகள் தடை செய்யப்படும் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே மழையால் சேதம் அடைந்த பகுதிகளை பார்வையிட்ட குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு மழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணங்கள் வழங்க வேண்டும் என்றும் நிவாரண பணிகளில் கழகத் தோழர்கள் உடனடியாக ஈடுபட்டு மழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகளை செய்யும் படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதைத்தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் இருந்து இயக்கப்பட வேண்டிய சமவெளிக்கு பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய அனைத்து, பேருந்துகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இரவு அல்லது இன்று காலை சீரமைப்பு பணிகள் முழுமை பெற்றால் மட்டுமே சமவெளிப் பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ள சூழலில் இயல்பு வாழ்க்கை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதிகளை மிரட்டும்

த.வெ.க.வினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்!

மதுரை மாநகராட்சி கவுன்சிலர்கள் போர்க்கொடி!

மதுரை, அக்.26-

மாநகராட்சி வார்டுகளில் நிறை வேற்றும் திட்டங்களை ரீல்ஸ் வெளியிட்டு மக்கள் பிரதிநிதிகளை மிரட்டும் தவெகவினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாமன்றக் கூட்டத்தில் கவுன்சிலர்கள் பலர் போர்க்கொடி தூக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.

மதுரை மாநகராட்சி மாமன்றக் கூட்டம் மேயர்(பொ) நாகராஜன் தலைமையில் நடந்தது.



மாநகராட்சி கமிஷனர் கவுரவ் குமார் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் நடந்த விவாதங்கள் வருமாறு:

திமுக குழு தலைவர் ஜெயராம்: வார்டுகளில் பணிகளை விரைந்து செய்ய வேண்டும் என பொறுப்பு

மேயர் ஒவ்வொரு கூட்டத்திலும் புலம்பி வருகிறார். ஆனால் அதிகாரிகள் அதனை கேட்பதில்லை. கவுன்சிலர்கள் சொல்லும் பணிகளை செய்யாத அதிகாரிகளுக்கு கமிஷனர் அபராதம் விதிக்க வேண்டும் என்றார்.

தி.மு.க.கவுன்சிலர் பாமா முருகன் : வார்டுகளில் பணிகளை செய்யவிடாமல் த.வெ.க. நிர்வாகி மிரட்டி வருகிறார். இந்த விஷயத்தில் கமிஷனர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கு பதிலளித்துப் பேசிய கமிஷனர், இது குறித்து கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

எதிர்கட்சித் தலைவர் சோலைராஜா: 52வது வார்டில் உதவி பொறியாளர் சிவசங்கரி தாக்கப்பட்டுள்ளார். அவரை தாக்கியவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பணியாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் பணிப்பாதுகாப்பு வழங்க கமிஷனர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கவுன்சிலர் விஜயா: மாநகராட்சி அதிகாரிகள் ஆளும் கட்சி பக்கம் சாய்ந்துள்ளனர். கவுன்சிலர்கள் தான் முக்கியம். எனது வார்டு பணிகளை வீடியோ எடுத்து தவெக வினர் ரீல்ஸ் வெளியிடு கின்றனர்.

இது குறித்து கேட்டால் மிரட்டுகின்றனர். தவெகவினருக்கு யார் இவ்வளவு அதிகாரம் கொடுத்தது. (அப்போது பெரும்பாலான கவுன் சிலர்கள் எழுந்து நின்று தங்களது வார்டுகளிலும் தவெகவினர் தலையீடு அதிகம் இருப்பதாக குரல் கொடுத்தனர்)

மேயர்(பொ) : தவெக வினர் ரீல்ஸ் எடுப்பதை சம்பந்தப்பட்ட கவுன்சிலர் கள் அனுமதிக்கக் கூடாது. தவெகவினர் மீது கமிஷனர் நடவடிக்கை எடுக்க வேண்டும். வார்டுகளில் தொய்வான வேலை நடக்கிறது. எந்த திட்டத்திற்கும் அதிகாரிகள் சம்திங் எதிர்பார்ப்பது வேதனை அளிக்கிறது என்றார்.

இவ்வாறு விவாதங்கள் நடைபெற்றன.

காளையார் கோவிலில்

மாமன்னர் மருது பாண்டியர்களின் 225வது ஆண்டு குருபூஜை!

பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் - சமுதாய பிரமுகர்கள் மரியாதை!

சிவகங்கை, அக்.26-

சிவகங்கையை தலைநகராக கொண்டு ஆட்சி பூரிந்தவர்கள் மாமன்னர் மருது சகோதரர்கள் . நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடிய பொழுது தூக்கிலிடப்பட்டு வீரமரணம் அடைந்தார்கள். அவர்கள் 224 ஆண்டுகளுக்கு முன்பாக அக்டோபர் மாதம் 24 ஆம் தேதி திருப்பத்தூரில் ஆங்கிலேயர்களிடம் சரணடைந்த பொழுது தூக்கிடப்பட்டார்கள். அவர்களது இறுதி வேண்டுகோளை ஏற்று அவர்களின் விருப்பப்படி உடல் திருப்பத்தூரிலும் தலை காளையார்கோவில் காளீஸ்வரர் ஆலயம் முன்பாக அடக்கம் செய்யப்பட்டது

மருதிருவர் கோரிக்கையினை ஏற்று உடல் திருப்பத்தூரிலும் தலை காளையார் கோவில் காளீஸ்வர ஆலயம் முன்பாக அடக்கம் செய்யப்பட்டது. மாமன்னர் கோளின் தியாகத்தை போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24ஆம் தேதி திருப்பத்தூரிலும், 27ஆம் தேதி காளையார் கோவிலிலும் மாமன்னர் மருது சகோதரர்களின் குருபூஜை அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு 225 வது ஆண்டு குருபூஜையினை முன்னிட்டு நாளை 27ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை காளையார் கோயிலில் அமைந்துள்ள மாமன்னர் மருது சகோதரர்களின் நினை விடத்தில் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள், சமுதாய தலைவர்கள் மாநிலம் முழுவதுமிலிருந்து வந்து அஞ்சலி செலுத்துவார்கள்.

முன்னதாக காலை 8 மணிக்கு மருது சகோதரர்களின் நினைவிடத்தில் சிறப்பு யாகங்கள், வழிபாடுகள் நடைபெறும். அன்னதானங்களும் நடைபெறும் . அதனைத் தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் சமுதாய தலைவர்கள் மருது பாண்டியர் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

குரு பூஜையை முன்னிட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா தலைமையில் மாவட்டம் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது வரிச்சியூர், சிவகங்கை, மானாமதுரை, இளையான்குடி, காளையார் கோவில், கல்லல், கீழசேவல்பட்டி, மானாமதுரை தேவகோட்டை உட்பட மாவட்டத்தில் 20க்கும் மேற்பட்ட இடங்களில் வாகன சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது .ஆங்காங்கே ரோந்து வாகனங்களில் போலீசார் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

1500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மாவட்ட முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இருசக்கர வாகனங்கள், வாடகை, கார் ,வேன்களில் வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது .குருபூஜைக்கு வருபவர்கள் அரசு பேருந்துகளில், சொந்த வாகனங்களில் முன் அனுமதி பெற்று வரவேண்டும். மாவட்டத்தில் உள்ள மதுபான கடைகள் முற்றிலுமாக மூடப்பட்டுள்ளது.

மருது பாண்டியர்கள் குருபூஜையினை முன்னிட்டு சிவகங்கை, காளையார் கோவில், மானாமதுரை, இளையான்குடி, திருப்பு வனம் தாலுகாவில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் கடந்த 20ம்தேதி முதல் 30ம் தேதி வரை தடை யுத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



காஞ்சி வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி தலைவர் சிப்ஸ் மணி (எ) கே.சுப்பிரமணி அவர்களின், படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது, தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் – முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர், எஸ்.ஆர்.ராஜா அவர்கள் கலந்து கொண்டு படத்தினை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செய்து, பின் அவர் கழகத்திற்கு ஆற்றிய பங்களிப்பை நினைவுகூர்ந்து உரையாற்றினார் நிகழ்வில், க.வசந்தகுமாரி, டி.காமராஜ், எஸ்.இந்திரன், எஸ்.சேகர், டி.ஆர்.கோபி, ரமணி, ஆதிமூலம், ஆர்.எஸ்.கிருத்திகா, தேவி, கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், இரா.ரத்னகுமார், ஜா.ரவிகுமார், இரா.செல்வகுமார், பி.ஜோதிகுமார், எஸ்.சுரேஷ், எல்.பெரியநாயகம், இரா.விஜயகுமார், டி.ஆர்.முரளி, மேலும் கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அண்ணல் தங்கோ

அக்டோபர் 26 (2015)



இளம்வயதிலேயே திராவிடர் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

சைதை பகுதியில் வட்டச் செயலாளர் பொறுப்பேற்று அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.


இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றவர்.

நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: 06.08.1964

மறைவு: 26.10.2025

ஆறுதொழுவு, திருப்பூர் மாவட்ட கழக முன்னாள் அவைத்தலைவர்

திரு. மு. சிவசபாபதி அவர்களின் மூத்த புதல்வரும்,

ஈரோடு மருத்துவ சங்க முன்னாள் செயலாளரும்,

ஒன்றிய குழு முன்னாள் தலைவரும்,

குண்டடம் கிழக்கு ஒன்றிய முன்னாள் செயலாளருமான

திரு. சிவ. செந்தில்குமார்

அவர்கள் கடந்த ஆண்டு 26.10.2025 இதே நாளில் எங்களை விட்டு பிரிந்த எங்கள் ஆருயிர் தலைவருக்கு முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்.

இங்ஙனம்

குண்டடம் கிழக்கு ஒன்றிய தி.மு.க.

திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.